| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>கிருஷ்ணமூர்த்தி<br>த.பெ.சின்னசாமி | அ.வ.எண். 20/2023 | 10.06.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கிற்கு அனைத்து விபரங்களையும் சொன்னது நான் தானா என்றால் நான் தான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் எனது வீட்டிற்கு முன்புள்ள இடத்தில் நெடுஞ்சாலைதுறையினர் கட்டிடம் கட்ட வந்ததால் அதனை தடுக்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) 27.04.1966 ல் எனது தகப்பனார் வழக்கு சொத்தை கிரையம் பெற்றதாக நான் கூறியுள்ளதற்கு ஆதரவாக கிரைய ஆவணத்தின் அசலை நான் நீதிமன்றதத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அசல் ஆவணம் வங்கியில் வைக்க எனக்கு தேவைப்படுவதால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக தாவா சொத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் 10 வருடங்களாக.

3) பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் கழிவுநீர் கால்வாய் அமைக்க முற்படுவதாக எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், ஆனால் எந்த தேதியில் அமைக்க முற்பட்டனர் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, 23.06.2023 ல் முற்பட்டனர். பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக நான் எனது வழக்குரையில் கூறியுள்ளது போல எவ்வித சங்கதிகளும் நடைபெறவில்லை என்றாலும்,

அவ்வாறு நடந்திருந்தால் நான் அதற்காக வருவாய் அலுவலரிடம் மனுவோ அல்லது காவல் நிலையத்தில் புகாரோ கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் உள்ள எனது பழைய ஓட்டுவீட்டினை இடித்துவிட்டு புதிய மெத்தை வீடு கட்டும்போது, முன்புறம் 20 அடி விட்டுவிட்டு கட்டியுள்ளதாக நான் கூறுவதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 4ம் பிரதிவாதி அவரது ஆட்களுடன் வழக்கு சொத்தின் முன்புறம் கழிவுநீர் கால்வாய் அமைக்க முயற்சி செய்ததாக கூறியுள்ளேன், ஆனால் நான் சொல்வதுபோல் எந்தவித நிகழ்வும் நிகழவில்லை என்றாலும், அரசுக்கு சொந்தமான இடத்திலேயே 4ம் பிரதிவாதி கழிவுநீர் வாய்க்கால் அமைத்துள்ளார் என்றாலும், மேற்படி கழிவுநீர் கால்வாய் அமைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லாததால், நான் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) எனது சகோதரிகளுடன் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவித்து வந்து, பின்னர் 04.02.2020 ல் எனது சகோதரிகள் அவர்களுக்குள்ள 3/4 பாகத்தினை எனக்கு பதிவு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டதாக கூறியுள்ளேன், ஆனால் தற்போது வரை வழக்கு சொத்திற்கான பட்டா கூட்டாகவே உள்ளது என்றால் சரியல்ல, தனிப்பட்டா போட்டுள்ளேன். மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தாக்கல் செய்கிறேன்.

6) தாவா சொத்தில் 20 அடி விட்டுள்ளேன் என்பதை நிரூபிக்க

வழக்கு சொத்தை ஆய்வு செய்ய ஆணையர் நியமனம் கோரி எவ்வித மனுவும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புலவரைபடத்தில் ஆக்கிரமிப்பு குறித்து இருக்காது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது தாவா சொத்திற்கு உரியது என்று ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல.

7) பிரதிவாதிகள் அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தில் தான் கழிவுநீர் வாய்க்கால் அமைத்துள்ளனர் என்றாலும், ஆனால் எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து அமைத்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மேற்படி ஆக்கிரமிப்பினை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதன் மூலமே நிரூபிக்க முடியும் என்றாலும், எனவே நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.